கடவுள் துணை.

# கலாதரங்கிணி.

புத்தகம் ௧.] ௧௮௮௬-ஸு மார்கழீ [சஞ்சிகை ௨.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

ஆனந்த மயமாகி யருவாகி யகிலமா யான்றபொற் சோதி யாகித்
தானந்த மில்லாத் தனிப்பெருந் தகவொடவ தாரம் பயின்ற தாகி
ஈனந் தவிர்த்தெம்மை யாள்வானெ ரருளினு லெளியவர்ச் சையுமாகியுள்
வானந் தழைத்தோங்க வொளிருமொரு பொருவிலா வத்துவை வணங்கல்
[செய்வாம்.

## மதவிஷயம்.

[௬-ம் பக்கத்தின் தொடர்ச்சி.]

இவ்வேதந்தான் இந்துக்களுடைய மதத்துக்கு முக்கிய ஆதாரமானது; மற்றெல்லா நூல்களும் இதைச்சார்ந்தே பிரமாணமாகுமன்றித்தனித்தாகா. ஆதியிலேஇந்தவேதம்அகண்டமாய் பிரமாவினாலே அத்தியயனம் பண்ணப்பட்டது. பின்பு துவாபரத்திலே ஸ்ரீபராசர பகவானுடைய புத்திரரான ஸ்ரீகிருஷ்ணத்துவைபாயன முனிவர் அந்த வேதத்திலுள்ள இருக்குகளையெல்லாம் பிரித்தெடுத்து ஒன்றாக்கி இருக்குவேதமென்றும், யஜுஸுகளைப் பிரித்தெடுத்து ஒன்றாக்கி யஜுர்வேதமென்றும், ஸாமங்களைப் பிரித்தெடுத்துச் சேர்த்து ஸாமவேதமென்றும், அதர்வ பாகங்களையெல்லாஞ் சேர்த்தெடுத்து அதர்வணவேதமென்றும் நான்கு சாகைகளாகப் பிரித்திருக்கிறார்.* அதனால் நான்கு வேதமென்றும், நான்மறை யென்றுஞ் சொல்லப்படும். ஸ்ரீவேதவியாசபகவான் தாம் பிரித்தருளிய வேதபாகங்களை அத்தியயன பரம்பரையாலே பிரவிர்த்திப்பிக்கும்படி திருவுள்ளம் பற்றி இருக்குவேதத்தை பைலமுனிவர்க்கும், யஜுர்வேதத்தை வைசம்பாயன மகாமுனிவர்க்கும், ஸாமவேதத்தை ஜைமினிமுனி

---

* இப்படி வேதத்தை வேறுவேறாகப் பிரித்தெடுத்ததனால் அந்த கிருஷ்ணத் துவைபாயனருக்கு வேதவியாசர் என்றும் வியாசர் என்றும் திருநாமங்களுண்டாயின; 'வேதவியாசர்' என்றால் வேதத்தைப் பிரித்தவர் என்பது பொருள்.

ந்திரருக்கும், அதர்வண வேதத்தை ஸுமந்து முனிவர்க்கும் உபதேசித்தருளினார்.

அதர்வணவேதம் முந்திய மூன்று வேதங்களினின்றும் எடுக்கப் பட்டதென்றும், அதனை நீக்கி வேதம் மூன்றே என்றும், சொல்வதுண்டு. அதனாலே வேதத்துக்கு த்ரயீ என்றும் ஓர்பெயர் வழங்கும்.

இவற்றுள், இருக்குவேதம் பெரும்பான்மையும் மந்திரபாகமாய்

ருசைவ ஹோத்ரங்கரோதி ।

என்கிறபடியே யாகங்களில் ஹோதா என்னும் * ருத்துவிக்குவினுடைய காரியத்துக்கு உரியதாயிருக்கும். ஸ்ரீவேதவியாசபகவானிடத்தில் முதலில் இவ்வேதத்தை அதிகரித்த பைலமகாரிஷியானவர் அதை இரண்டு சம்ஹிதைகளாக்கி இந்திரப்பிரமிதி என்பவருக்கு ஒன்றையும் பாஷ்கலர் என்பவருக்கு மற்றொன்றையும் பிரசாதித்தார். அந்த பாஷ்கல முனிவர் தாம்பெற்ற சம்ஹிதையை நான்காக்கி போத்தியர், அக்கினிமாடகர், யாக்கியவல்கியர், பராசரர்† என்னும் நால்வருக்கும் பிரசாதித்தார். இந்திரப்பிரமிதியென்னு முனிவர் தாம் ஓதின சம்ஹிதையை தங்குமாரரான மாண்டூகிய ரென்பவருக்குப் பிரசாதித்தார். அந்த சம்ஹிதையானது புத்திரரும் சிஷ்யரும் ஆகிய முறையினாலே சிஷ்யபிரசிஷ்ய பரம்பரையிலே வந்துகொண்டிருந்தது. இப்படியிருக்கையில் வேதமித்திர னென்கிற சாகல்யர் தாம் ஓதின இந்திரபிரமிதிசாகையை ஐந்தாகச் செய்து, முத்கலன், கோமுகன், வாச்சியன், சாலீயன், சைசிரன் என்பவர்களாகிய தம்முடைய மாணாக்கரைவருக்குக் கொடுத்தார். அந்தச் சாகலியருடைய ‡ஸப்பிரமசாரியரான சாகபூர்ணரென்பவர் இந்திரபிரமிதி சங்கிதையை மூன்றாகச் செய்து நிருக்தமென்கிற வேதாங்கமொன்றுஞ்செய்து ஆக நான்கையுந்தஞ்சிஷரான கிரவுஞ்சன், வைதாளிகன், பலாகன், நிருக்தன் என்னும் நால்வருக்கும் முறையே பிரசாதித்தார். முன்சொல்லப்பட்ட சாகலியருடைய ஸப்பிரமசாரியான பாஷ்கலி யென்பவர் அந்த இந்திரபிரமிதிசாகையை மூன்றுசாகைகளாக்கி காலாயனி, கார்க்கியர், ஜபர், என்கிற சிஷ்யர் மூவருக்குக் கொடுத்தார். இப்படியாக ருக்குவேதத்தில் சாகைகள் பிரதிசாகைகள் அநுசாகைகள் அனே

---

* ருத்துவிக்குகள் - யாகஞ்செய்விப்போர்.

† இந்தப் பராசரர் வேறே, ஸ்ரீகிருஷ்ணத்துவைபாயனருடைய தந்தையராகிய ஸ்ரீபராசரபகவான் வேறே.

‡ ஸப்பிரமசாரி - கூடவேதமோதுவோர்; ஒருசாலை மாணாக்கர்.

கமுண்டாயின. இந்தவேதம் மொத்தத்தில் இருபத்து நான்கு சாகைகளோடு கூடியதாம்.

யசுர்வேதம் பெரும்பாலும் விதிமுறைகளை யுணர்த்துவதாய்

யஜுர்வேதோ விதிநாயுத: ।

என்கிறபடி அத்துவர்யு என்னும் ருத்துவிக்குவினுடைய செய்கைக்கு ஏற்றதாயிருக்கும். ஸ்ரீவேதவியாச பகவானிடத்தில் இவ்வேதத்தைப்பிரதமத்தில் ஓதியுணர்ந்த வைசம்பாயனமுனிவர் இதை இருபத்தேழுசாகைகளாகச் செய்து தஞ்சிஷ்யரனேகருக்குப் பிரசாதித்தார். அவர்களும் கிரமப்படி ஓதிவந்தார்கள். அந்த வைசம்பாயன மகாமுனிக்கு பிரமபாந்தருடைய குமாரரான யாக்கியவல்கியர் என்கிறவர் சிஷ்யராயிருந்தார். அவர் முக்கியமானதருமங்களை யெல்லாம் அறிந்தவராய் எப்போதும் குருவுக்குப் பணிவிடை செய்துவந்தார். முன்பொருகால் மகாமேருவிலே ரிஷிகளெல்லாருங்கூடித் தம்முடைய சபைக்கு எந்த ரிஷி இன்று வாராமற் போவாரோ அவருக்கு ஏழுதினங்களுக்குள்ளாக பிரமஹத்திதோஷம் வரக்கடவதென்று ஒரு சாபமுண்டாக்கியிருந்தார்கள். அந்த ஏற்பாட்டை இந்த வைசம்பாயன மகாமுனிவரொருவர் கடந்திருந்தார். அதனாலேஅவருக்கு அந்ததோஷம் சம்பவித்தது. எப்படியென்றால், ஒருநாள் அந்தவைசம்பாயனர் தம்முடன்பிறந்தாள் புத்திரனான பாலகனொருவனைக்காலினாலேதீண்டினமாத்திரத்திலேஅந்தப் பாலகன்மரணமடைந்தான், அதனாலே பிரமஹத்திசம்பவித்தது. அப்போது வைசம்பாயனர் தஞ்சிஷர்களை நோக்கி, ஓ சிஷர்களே! என்க்காக நீங்கள் பிரமஹத்தி நீங்கும்படியான விரதத்தைச் செய்யுங்கள், வேறொன்றும் நினையாதேயுங்கள் என்று நியமித்தார். அப்போது யாக்யவல்கியர் குருவைநோக்கி, சுவாமி! அற்பதேஜசு உள்ளவர்களான அவர்களை ஏன்வருத்தவேண்டும்? அடியேன்ஒருவனே அந்த விரதத்தைச் செய்கிறேன்என்று சொல்ல,குருவானவர் கோபமடைந்து யாக்கியவல்கியரைப்பார்த்து, நீ பிராமணரை அவமானம் பண்ணினாய், அன்றியும் என் ஆக்கினையையும் பங்கப்படுத்தினாய், இப்படிப்பட்ட நீ எனக்குச் சிஷ்யனாயிருக்கத்தகாது: ஆகையால் என்னிடத்தில் ஓதின வேதங்களைவிட்டுவிடு என்று உருத்துச்சொல்லக் கேட்டு அவ்யாக்கிவல்கியரும், ஓ ஆசாரியரே, தேவரீரிடத்தில் பக்தியினாலே இப்படிச் சொன்னேனேயல்லது வேறில்லை; ஆயினும் தேவரீர் இவ்வாறு நியமித்தமையால் உம்மிடத்தில் ஓதின வேதமும் எனக்கு வேண்டாம், என்று சொல்லி யசுர் வேதங்களை உதிரத்தினால் பூசப்பட்ட ரூபமுள்ளவைகளாய்க் கக்கிப்போட்டு, இதோ

உமது வேதத்தை உமக்குக் கொடுத்தேன் என்று சொல்லிப்போய் விட்டார். பின்பு யாக்யவல்க்கியர் கக்கிப்போட்ட வேதங்களை மற்றுமுள்ள பிராமணர் நேராக இக்கக்கலையுண்பது தகுதியன்றென்று நினைத்துத் தித்திரியென்கிற பட்சிகளாகி யுண்டார்கள். ஆதலால் அவர்களுக்குத் தைத்திரீயர் என்று பெயர் வந்தது. அந்த யஜுர்களுக்குத்தான் தைத்திரீயசாகை * யென்று பெயர். அந்த வைசம்பாயன சிஷ்யர்களெல்லாம் குருவினுடைய கட்டளையிடப்பட்டபடி பிரமஹத்தி திரும்படியான விரததைதை யாசரித்து அத்துவர்யு காரியஞ் செய்துவந்தார்கள். அதனால் அவர்களுக்குச் சரணத்துவர்யுக்கள் என்கிறபெயர் வழங்கிற்று.

அந்த யாக்கியவல்கியரோ சூரியபகவானிடத்தில் யஜுசுகளை கிரகிக்கவேண்டி பிராணயாம பராயணராய்ச் சூரியபகவானை நமஸ்கரித்துத்துதித்தார். துதிக்கவே சூரியபகவான் குதிரைவடிவாக அவருக்கு பிரத்தியக்ஷமாகி, ஓ முனிவரே! உமக்கு வேண்டும் வரத்தைக்கேளு மென்ன, யாக்யவல்கியரும், சுவாமி! என் குருவான வைசம்பாயன மகாமுனிவர்க்குத் தெரியாத யஜுர்வேதங்களை எனக்குப் பிரசாதித் தருளலவேண்டும் என்று பிரார்த்தித்தார். அவ்வாதித்தியதேவன், அம்முனிவர் பிரார்த்தித்தபடி (வியாசோபதேசமில்லாமையாலே) வைசம்பாயனர்க்குத் தெரியாதவைகளான அயாதயாமங்கள் என்கிற யஜுசுகளைப் பிரசாதித்தார். அந்த சாகைகளை அத்தியயனஞ் செய்தவர்களுக்கு வாஜிகள் அல்லது வாஜஸனேயர் என்று பெயர் வழங்கும், ஏனெனில் சூரியன் வாஜி [= குதிரை] வடிவத்தோடு அந்த யசுர்வேதங்களை யுபதேசித்தானுதலால்; இது வாஜஸநேய ஸம்ஹிதையென்று பெயர் பெறும். இந்த வாஜசனேய சங்கிதையை யாக்யவல்க்கிய மகாமுனிவர் காண்வசாகை முதலான பதினைந்து சாகைகளாகப் பிரித்தார். இந்த யசுர்வேதம் மொத்தத்தில் நூற்றொருசாகைகளோடு கூடியதாம்.

ஸாமவேதம் பெரும்பாலும் ஸ்தோத்திரரூபமாய்

ஸாமவேதேநோத்காதா ।

என்கிறபடியே உத்காதா என்னும் ருத்துவிக்குவினுடைய தொழிலுக்கு உரித்தானது. இந்தவேதத்தை வியாச சிஷ்யரான ஜைமினிமுனியானவர் தம்முடைய குமாரரான சுமந்து வென்பவருக்கு உபதேசிக்க, அவரும் தம்முடைய புத்திரரான சுத்துவா என்பவருக்கு உபதேசித்தார். பின்பு அந்த சுத்துவாவின் குமாரரான

* இந்தத் தைத்திரீய யஜுஸ்ஸை க்ருஷ்ணயஜுஸ் என்றும் வாஜஸநேய ஸம்ஹிதையை சுக்கில யஜுஸ் என்றும் சொல்வார்கள்.

சுகர்மா வென்பவர் தம் பிதாவினிடத்திலே தாமோதின அந்தச்சை மினி சங்கிதையை ஆயிரம் பிரிவாகப் பிரித்துத் தஞ்சிஷ்யர்களான ஹிரண்யநாப ரென்பவருக்கும் பவுஷ்பிஞ்சி யென்பவருக்கும் பிர சாதித்தார். கவுஸல்ய ரென்றும் பெயர்பெற்ற அந்த ஹிரண்ய நாப ருக்கு வடதிசையார் ஐந்நூறுபேர் சாமசாகையோதுகிற சிஷரா னர்கள்; அவர்கள் ஐந்நூறு சாகைகளை யோதிக்கொண்டு ஒரு காலத்தில் கிழ்த்திசையிலிருந்ததனால் கிழ்த்திசைச் சாமகர் என் றுஞ் சொல்லப்பட்டார்கள். அந்தப் பவுஷ்பிஞ்சி யென்பவருக் கும் லோகாக்ஷி, கவுமுதி, கக்ஷிவான், லாங்கலி முதலான அனேகர் சிஷ்யராயிருந்தார்கள்; அவர்கள் தாங்களோதின சங்கிதைகளைப் பலவாக விரித்தார்கள். முன்சொன்ன ஹிரண்ய நாபருடைய சிஷர் களில் ஒருவரான கிருதநாமா வென்பவர் இருபத்துநான்கு சங்கி தைகளைத் தம்மாணுக்கரை ஓதுவித்தார். அவர்களும் இந்தச் சாம வேதத்தை மிகவும் விரித்தார்கள். இந்த ஸாமவேதம் மொத்தத் தில் ஆயிரஞ்சாகைகளோடு கூடியதாம்.

அதர்வணவேதம் அரசர்க்கு வேண்டிய சாந்திக பௌஷ்டிகாதி களைக்குறித்ததாய்

ஷமெவெ-நவு-ஹா ।

என்கிறபடியே மற்றைவேதங்களோடே இதுவும் பிரமா என்பவ ன் காரியத்துக்கு அல்லது புரோகித காரியத்திற்கு வேண்டியதா யிருக்கும். ஸ்ரீவேதவியாச மகாமுனிவரிடத்தில் இந்த வேத த்தை யோதின சுமந்து முனிவர் அதைத் தம்முடைய சிஷரான கபந்த ரென்பவருக்குக் கொடுத்தார். அந்தக்கபந்தமுனியும் அவ் வேதத்தை இரண்டு பிரிவாக்கி தேவதரிசர், பத்தியர் என்கிறசிஷ ருக்குக் கொடுத்தார். அந்தத் தேவதரிசருக்கு மேதன், பிரமபலி, சவுல்காயனி, பிப்பலாதன் என்று நால்வர் மாணுக்கரிருந்தார்கள். அவர்கள் தேவதரிசர் செய்த நான்கு சங்கிதைகளையும் முறையே ஓதினார்கள். பத்தியருக்கும் ஜாபாலி, குமுதாதி, சவுனகர் என்று மூவர் மாணுக்கரிருந்தார்கள். அவர்கள் தங்குரு பிரித்த மூன்று சங் கிதைகளையும் அனேக சங்கிதைகளாகச் செய்தார்கள். அந்தச் சவு னக ரென்பவர் தம்முடைய சங்கிதையை இரண்டாக்கி பப்புரு வென்பவருக்கு ஒன்றும், சைந்தவரென்பவருக்கு மற்றொன்றுமா கக் கொடுத்தார். அந்தச் சைந்தவருடைய சிஷ்யரான முஞ்சிகேச ரென்பவர் தாம்பெற்ற சங்கிதை யைஇரண்டாகப்பிரித்தார். அந்தச் சங்கிதைகளிலே முக்கியமான பாகங்கள் ஐந்து. அவையாவன:—நக்ஷத்திர கல்ப்பம், வேதகல்ப்பம், சங்கிதாகல்ப்பம், ஆங்கிரச

கல்ப்பம், சாந்திக்ல்ப்பம் என்பவைகளாம். [நக்ஷத்திரகல்ப்பமாவது—நக்ஷத்திராதிகளுடைய சொரூபகுணாதிகளை விவரிப்பது. வேதகல்ப்பமாவது—பிரமத்துவ முதலான புரோகித காரியங்களைத் தெரிவிப்பது. சங்கிதாகல்ப்பமாவது—மந்திரங்களின் ஏற்பாட்டையுணர்த்துவது. ஆங்கிரச கல்பமாவது—ஸ்தம்பனமோகன மாரணாதிகளான அபிசாரங்களைக் காட்டுவது. சாந்திகல்ப்பமாவது—யானை குதிரை முதலானவைகளைப்பற்றிய பதினெட்டு மஹாசாந்திகளை விதிப்பது]. அதர்வணவேதத்திலே இவைதாம் சிரேஷ்டமானவைகள். இது பன்னிரண்டு சாகைகளுள்ளதாம். [தொடர்ச்சி.]

---

# ஆரணியகாண்டம்.

## மாரீசன்வதைப் படலம்.

[உச-வது பக்கத்தின் தொடர்ச்சி.]

**22.**—தங்கை உம்-தங்கையாகிய சூர்ப்பணகையும், அ வழி - அவ்விடத்தில், தலையில் தாங்கிய செம் கையள் - தலையின்மேல் சுமந்த சிவந்தகையையுடையவளும், சோரியின் தாரை சேந்து இழி கொங்கையள் -ரத்த தாரையானது சிவந்து பெருகப்பெற்ற கொங்கைகளையுடையவளும், மூக்கினள் - (சோரியின்தாரைசேர்திழி) மூக்கையுடையவளும், குழை இல் காதினள், குண்டலமற்ற காதையுடையவளும், மங்குலின் ஒலி பட திறந்த வாயினள் - மேகத்தொனிபோல அழுகுரலுண்டாம்படித்திறந்தவாயினை யுடையவளும், எ - று.

‘செங்கை’ என்றது பெருகிய குருதியைத் துடைத்துச் சிவந்தகையை என்க. ‘சோரியின் தாரை சேந்திழி’ என்றது கொங்கைக்கும் சேர்க்கப்பட்டது. ‘குழையில்’ என்னும் விசேஷணத்தால் காதும் அறுப்புண்டதெனக் கருத்துக்கொள்ளவேண்டும்; கீழ் சூர்ப்பணகைப்படலத்து 84-ம்பாட்டில்

“மூக்குங் காதும்வெம் முரண்முலைக் கண்களு முறையால்
போக்கிப் போக்கிய சினத்தொடும் புரிகுழல் விட்டான்”

என்று கூறியிருக்கின்றமையின்.

இப்பாட்டும் மேற்பாட்டும் ஒருதொடர். சேந்து-வினையெச்சம். சே - பகுதி; சேத்தல்—சிவத்தல்.

**23.**—முடி மிடை வாய்தலில் முறையிட்டு - (வேற்றரசர்களின்) முடிகள் நெருங்கப்பெற்ற கோபுரவாயிலில் அபயமிட்டு, ஆர் கலி கடை யுகம் கடல் ஒலி காட்ட காந்துவாள்-நிறைந்த வொலிபொருந்திய யுகாந்தகாலத்திற் றோன்றுகின்றகடலிரைச்சல்போலஅழுகின்றவளும், குட திசை செக்கரின்

சேந்த கூந்தலாள் - மேற்றிசையிற் காணப்படுகின்ற செவ்வானம் போலச் சிவந்த கூந்தலையுடையவளும் ஆகி, வட திசை வாயிலில் வந்து தோன்றினாள் - வடக்குத்திசையிலுள்ள கோபுரவாசலில் வந்துகாணப்பட்டாள், எ - று.—வாய்தல்=வாயில்.

தங்கையும் கையள் கொங்கையள் மூக்கினள் காதினள் வாயினள் காந்துவாள் கூந்தலாள் ஆகிவந்து தோன்றினள் என்க.

'முடிமிடைவாய்தலில்' என்பதற்குச் சிகரங்கள் நெருங்கிய கோபுரவாயில் எனவும் பொருள் கொள்ளலாம்.

**24**.—தோன்றலும் – அப்படி காணப்பட்டவுடனே, தொல் நகர் அரக்கர் தோகையர் – பழமையான லங்காபுரியிலுள்ள ராக்ஷஸஸ்த்ரீகள், என்று - எதிர்கொண்டு சென்று, எதிர் வயிறலைத்து - சூர்ப்பணகைக்கெதிரே வயிற்றிலடித்துக்கொண்டு, இரங்கி ஏங்கினர் - மனமிரங்கியழுதார்கள்; மூன்று உலகு உடையவன் தங்கை - திரிலோகங்களையும் தன்னுடையவாகப்பெற்ற [திரிலோகாதிபதியான] ராவணனுடைய தங்கையானவள் [சூர்ப்பணகை], மூக்கிலள் – மூக்கற்றவளாய், தனியவள் - ஒன்றியானவளாய். வர - வருகையில், தரிக்கவல்லரோ - பார்த்துச் சகிக்கமாட்டுவார்களா [சகிக்கமாட்டாரென்றபடி], எ - று.

தோன்றலும் - வினையெச்சம். இப்பாட்டின் பின்னிரண்டடியும் கவிக்கூற்று.

**25**.—அரக்கரும் - ராக்ஷஸர்களும், பொருக்கென நோக்கினர் - திடீரென்று பார்த்தவர்களாய், புகல்வது ஓர்கிலர்-(ஒன்றும்) சொல்லத்தெரியாதவர்களாய் [பிரமித்து], கரத்தொடு கரங்களை புடைத்து அசனி ஆம் என இரைத்தனர் - கைகளோடு கைகளைக்கொட்டி இடியென்று சொல்லும்படி ஆரவாரித்தவர்களாய், நெருப்பு எழ கண்களை விழித்து - நெருப்புப்பொறி சிந்தக் கண்களை விழித்துப்பார்த்து, வாய் மடித்து - வாயை மடித்துக்கொண்டு, நிற்கின்றார் - நின்றார்கள், எ - று.

அரக்கரும் நோக்கினர் ஓர்கிலர் இரைத்தனர் புடைத்து விழித்து மடித்து நிற்கின்றார் என்க.

**26**.—அந்தரம்-இக்கொடுமை, இந்திரன்மேலது ஒ-இந்திரனிடத்ததோ; உலகம் ஈன்ற பேர் அந்தணன்மேலது ஒ - ஸகலலோகங்களையும் படைத்த பெரிய அந்தணனாகிய பிரமதேவனிடத்ததோ; ஆழியானது ஒ - விஷ்ணுவினிடத்ததோ; சந்திரமௌலிபால் தங்கும் ஒ - சிவனிடத்தில் பொருந்துமோ [தெரியவில்லை], என்று நின்று - என்றுசொல்லி நின்று, சிலர் - சில ராக்ஷஸர்கள், அழல்கின்றார் - உடம்பெரிந்தார்கள், எ-று.

**27**.—செப்பு உறற்கு உரியவர் தெவ்வர் யார் உளர் - (இன்னாரென்று)

சொல்லுதற்குரியவர்களாகிய பகைவர்கள் யாவரிருக்கின்றார்கள் [ஒருவருமில்லை யென்றபடி]; இது - இந்தக்காரியம், மு புறத்து உலகம் உம் - திரிலோகங்களும், அடங்க மூடிய - அடங்கும்படிமூடிய, இ புறத்து அண்டத்தோர்க்கு - இந்தப் பிரமாண்டத்திலுள்ளவர்களுக்கு, இயைவது அன்று - செய்தற்கிசைவதல்ல; (ஆதலால்) அ புறத்து அண்டத்தோர் - இதற்குப் புறவண்டத்திலுள்ளவர்கள், ஆம் - இது செய்திருக்கலாம், என்றார் - என்று சொன்னார்கள், சிலர் - சில ராக்ஷஸர்கள், எ-று.

**28.**—என்னை - இஃதென்ன ஆச்சரியம்! இராவணன் தங்கை என்ற பின் - இராவணனுக்குத் தங்கையென்று சொன்னபின்பு, அன்னையே என்று அடி வணங்கல் அன்றி - தாயேயென்று சொல்லிவந்து இவளுடைய பாதங்களிலே விழுந்து வணங்குவதல்லாமல், உன்ன ஏ ஒண்ணும் ஓ—(இவள் திறத்துப்பிழைக்க) மனதால் நினைக்கவுங்கூடுமோ [கூடாது]; (ஆதலின்), இவள் தன்னை தான் ஏ அரிந்தனள் - இவள் தன்னைத்தானே யரிந்துகொண்டாள், என்றார் சிலர் - என்று சொன்னார்கள் சிலராக்ஷஸர்கள், எ - று.— "உன்னவே யொண்ணுமோ" என்றதனால் வாக்கினாற் சொல்வதும் காயத்தாற் செய்வதும் பின்னும் 'பெருங்குற்றமாய் முடியும் ஆதலால் அவை ஒண்ணவே யொண்ணு வென்பதாம்.—'ஒன்றுமோ' என்பது 'ஒண்ணுமோ' எனமருவியது.

**29.**—புரந்தரன்போர் இலான் ஏவல் பூண்டனன் - தேவேந்திரன் (இராவணனோடு) போர்புரிய வலியில்லாதவனாகி ஏவற்றொழிலை மேற்கொண்டான்; ஆர் உலாம் நேமியான் ஆற்றல் தோற்று போய் நீரினன் - கூர்மை பொருந்திய சக்கிரதரனாகிய விஷ்ணுவானவன் தன் வலிகுன்றி நீரிலுள்ளவனானான்; செருப்பினன் பொருப்பினன் - மழுவாளியாகிய சிவன் மலையிலுள்ளவனானான்; (ஆதலின்) இனி இது ஆர் கொல் என சிலர் அறைகின்றார் - இனி இக்காரியஞ்செய்தவர்கள் யாவரென்று சில ராக்ஷஸர்கள் சொல்லுகின்றவரானார்கள், எ-று.—'நீரினன் பொருப்பினன்' என்றது விஷ்ணுவும் சிவனும் தோற்றுப்போய் முறையே கடலிலும் மலையிலும் ஒளித்துக்கொண்டார்கள் என்னும் இழிபுதோன்றற் கென்க.

**30.**—சொல் பிறந்தார்க்கு இது துணிய ஒண்ணும் ஏ - புகழுள்ளவர்களுக்கு இக்காரியம் (செய்ய மனம்) துணிதல் கூடுமோ [கூடாது]; (ஆதலால்) இல் பிறந்தார் தமக்கு இயைவ செய்திலள் கற்பு இறந்தாள் என புகன்று - நற்குடியிற் பிறந்தவர்க்குப் பொருந்திய செயல்களைச் செய்யாமல் கற்புக்கடந்தாளென்று சொல்லி, கரன் இவள் பொற்பு இறந்து ஆக்கினன் கொல் என்றார் சிலர் - கரன்தான் இவளுடைய அழகு கெடச்செய்தானோ என்று சொன்னார்கள் சில ராக்ஷஸர்கள், எ - று.—இறந்து - செய வெனெச்சத் திரிபு.

**31.**—தத்து உறு சிந்தையர் தளரும் தேவரில்- தடுமாற்றம் பொருந்திய மனமுடையவர்களாய் சோர்வடைந்திருக்கின்ற தேவதைகளில் (யாராவது); பிழைப்பு இல் சூழ்ச்சியார் பித்து உற வல்லர் ஏ - தாம் பிழைக்கு முபாய மற்றவர்களாய் இப்படிப்பட்ட பித்தத்தையும் அடைவார்களா [அடையார்]; (ஆதலின்) மு திறத்து உலகை உம் முடிக்க எண்ணுவார் - மூவகை யுலகங்களையும் அழிக்க நினைக்கின்றவர்கள்தாம், இ திறம் புணர்த்தனர் என்கின்றார் சிலர் - இவ்வாறு செய்தனர் என்று சொன்னார்கள் சில ராக்ஷஸர்கள், எ - று.—உலகம் பதினான்காயிருக்க, 'முத்திறத்துலகம்' என்றது சுவர்க்க மர்த்திய பாதாளம் என்னும் நோக்கத்தாலென்க; அல்லது, கிருதகம், அகிருதகம், கிருதாகிருதகம் என மூவகைப்பட்ட உலகங்களுமாம். **கிருதகம்**= செய்யப்பட்டது, பூமி, பாதாளம், முதலாயின; **அகிருதகம்**=செய்யப்படாதது; தபோலோக சத்தியலோகாதிகள். **கிருதாகிருதகம்**= செய்யப்பட்டதும் செய்யப்படாததுமா யிருப்பது, சுவர்க்கலோக முதலியன.

**32.**—இனி ஒரு கற்பம் உண்டு என்னின் அன்றி - இனி வேறொருகற்பம் உண்டாயிருந்தாலல்லது [இக்கற்பத்தில்], வனை கழல் வயங்கு வாள் வீரர் வல்லர் ஓ – (தமது பிரதாபம் தோன்றக்) கட்டிய வீரக்கழலினையும் விளங்குகின்ற வாளினையுமுடைய வீரர்களும் இக்காரியஞ் செய்யவல்லர்களோ [அல்லர்]; (ஆதலின் இது) பனி வரும் கானிடை பழிப்பு இல் நோன்பு உடை முனிவரர் வெகுளியின் முடிபு - பயங்கரமான காட்டிலுள்ள பழுதற்ற தவவிரதத்தையுடைய முனிசிரேஷ்டர்களின் கோபத்தின் முடிபாகும் [பயனாகும்], என்றார் சிலர் - என்று சொன்னார்கள் சில ராக்ஷஸர்கள், எ-று.—'பனிவரும்'-பனிபெய்கின்ற என்னவுமாம். கற்பம்-காலத்தின் ஓர் பெரும் பகுதி.

**33.**—கரை அறு திரு நகர் கரும் கண் நங்கைமார் - அளவற்ற செல்வத்தையுடைய லங்காபுரியிலுள்ள கறுத்தகண்களையுடைய ராக்ஷஸஸ்திரீகள், நிரை வளை தளிர் கைகள் நெரித்து நோக்கினர் - வரிசையாக (அணியப்பெற்ற) வளையல்களையுடைய தளிர்போன்ற கைகளைப்பிசைந்துகொண்டு பார்த்தவர்களாய், பிரை உறு பால் என நிலையில் பின்றிய உரையினர் - பிரையுற்ற பால்போல தங்நிலையிற்றடுமாறிய வார்த்தைகளை யுடையராய், ஒருவர்முன் ஒருவர் ஓடினர் - ஒருவர்முன் னொருவராக வோடினார்கள், எ - று.

**34.**—முழவினில் வீணையில் முரளி யாழினில் தழுவிய குழலினில் சங்கில் தாரையில் - மத்தளத்தினின்றும் வீணையினின்றும் முகவீணையினின்றும் நாகசுரத்தினின்றும் தவளசங்கத்தினின்றும் எக்காளத்தினின்றும், எழு குரல் இன்றி -உண்டாகின்ற (மங்கல) வோசையில்லாமல், என்றும் உம் இல்லது ஓர் அழு குரல் - எக்காலத்திலும் இல்லாததாகிய ஒரு அழுகுரலானது, அன்று அ இலங்கைக்கு பிறந்தது - அப்போது அவ்விலங்கையில் உண்

டாயிற்று, எ - று.—இலங்கைக்கு - வேற்றுமைமயக்கம். முரளியாழ் - முக வீணை; புல்லாங்குழலுமாம்.

**35**.—தள் உறுமருங்கினர் - (இருமருங்கும்) சாயு மிடையை யுடைய பெண்கள், கள்ளுடை வள்ளம் உம்-கள்ளையுடைய சிறு கிண்ணங்களும், களித்த தம்பி உம் - கள்ளினாற்களித்த ஈக்களும், (களித்த) உள்ளமும் -சந்தோஷித்திருந்த மனதும், ஒருவழி கிடக்க - ஓர்பக்கத்திலே யிருக்க, ஓடினர் - ஓடி, வெள்ளம் உம் நாண உற விரிந்த கண்ணினர் - பிரவாகமும் வெட்கும்படி பரவிய நீர் பெருகப்பெற்ற கண்களை யுடையராய், தழீஇக்கொண்டு ஏகினர் - (சூர்ப்பணகையை) தழுவிக்கொண்டு சென்றார்கள், எ - று.

**36**.—ஏந்தக உழவரை நாட்டும் தண்டத்தர் - வாள்வீரரையும் நிலைநிறுத்தத்தக்க தண்டனையை யுடையவர்களும், காந்திய மனத்தினர் (கோபத்தால்) தீய்ந்த மனதையுடையவர்களும், (ஆகிய ராக்ஷஸஸ்திரீகள்), புலவி கைம்மிக சேந்த கண் அதிகம் உம் செவந்து நீர் உக - (தங்கணவரோடு) ஊடல் அதிகரித்ததனால் சிவந்தகண்கள் இன்னும் அதிகமாகச்சிவந்து நீர்சிந்தும்படி, வேந்தனுக்கு இளையவள் தாளில் வீழ்ந்தனர் - அரசன் தங்கையாகிய சூர்ப்பணகையின் பாதத்தில் விழுந்தழுதார்கள், எ - று.

**37**.—பொன் தலை - சுவர்ண சிகரங்களையுடைய, மரகத பூகம் நேர்வு உற சுற்றிய மணி வடம் தூங்க - மரகதமணியாற்செய்த கமுகமரங்களில் ஒழுங்காகச்சுற்றிய நவரத்தினங்க ளிழைக்கப்பெற்ற (தங்க) வடங்கள் அசைய, முற்றிய ஊசலின் ஆடலில் முனிவு உற்று எங்கினர் - விசேஷித்த ஊசலாடுதலில் வெறுப்புக்கொண்டு இரங்கினவர்களாகி, சிறு இடை அலமர தெருவு சேர்கின்றார் - தமது சூக்ஷ்மமாகிய இடைகள் வருந்தும்படி வீதியில் வந்தார்கள் (சிலராக்ஷஸஸ்திரீகள்), எ - று.

**38**.—எழு என மலை என எழுந்த தோள்களை - (வன்மையில்) எழுப் போலவும் (பருமனில்) மலைபோலவும உள்ள உந்நதமான (தங்கணவரது) புஜங்களை, தழுவிய தளிர் வளை நெகிழ - கட்டித்தழுவிய தளிர்போன்ற கைகளினின்றுவளையல்கள்கழன்றுபோகும்படியாகவும், தாமரை முழு முகத்து இரு கயல் முத்தின் ஆலிகள் பொழிதர - செந்தாமரை மலர்போன்ற ஒருமுகத்தினிடத்துள்ள இரண்டு மீன்கள்போன்ற கண்களிலிருந்து முத்துப்போன்ற நீர்த்துளிகள் துளிக்கும்படியாகவும், பொருமி விம்முவார் சிலர் - அழுது பெருமூச்சு விடுவோர்களாகிய சிலஸ்திரீகள், உளர் - இருந்தார்கள், எ-று.

**39**.—பொய் நிலை மருங்கினர் - பொய்யாகிய நிலைமையுள்ள இடையினை யுடைய சிலராக்ஷஸஸ்திரீகள், நேருநரை இல்லான் நெய் நிலைய வேல் அரசன் - தனக்கொப்பானவரொருவரையுமில்லாதவனாகிய நெய்தோயப்பெற்ற வேலையுடைய (நம்முடைய) அரசன் [ராவணன்], இ நிலை உணர்ந்த

பொழுது எ நிலையன் என்னு - (சூர்ப்பணகையினுடைய) இந்த நிலைமையை அறிந்த பொழுது எப்படிப்பட்ட மனோநிலைமையை யுடையனுவனோ என்று சொல்லி, மை சிலை நெடும் கண் மழை வான் நிலையது ஆக - மைதங்கிய நீண்ட கண் சோனாமாரி பொழிகின்ற மேகத்தின் தன்மையை யுடையதாக [கண்களினின்றும் தாரை தாரையாக நீர் பெருக], புலம்பினர் புரண்டார் - அழுது புரண்டார்கள், எ - று.

இது முதல் 60-ம் பாட்டுவரையில் பெரும்பாலும் கடைச்சீர் மாச்சீரும் மற்ற மூன்று சீர்களும் விளங்காய்ச் சீர்களுமாகி வருகிற அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள்.

**40**.—அனந்தர் இள மங்கையர் மனத்தலை வரும் கணவர் இன் சுவை மறந்தார் - [தங்கணவரோடு] நித்திரை செய்துகொண்டிருந்த யுவதிகள் மனதினிடத்திலே தோன்றுகிற தங்கணவர்களிடத் தனுபவிக்கத்தக்க இன்பத்தையு மறந்தவர்களாகி, கனம் தலை வரும் குழல் ஒசிந்து - மேகம்போன்ற பெருமைபொருந்திய கூந்தலவிழ, கலைசோர - வஸ்திரம் நெகிழ, நலந்தலைப கொங்கைகள் ததும்பிட-மார்பினடுவிலுள்ள ஸ்தனங்களசைய, நடந்தார் - நடந்தவர்களாகி; அழுங்கி அயர்கின்றார் - மனம்வருந்திச் சோர்கின்றார், எ - று.—ஒசிந்து - செயவெனெச்சத்திரிபு. அனந்தர் - போலி.

**41**.—குலை கோதை மங்கையர்கள் - அவிழப்பெற்ற கூந்தலையுடைய ராக்ஷஸ ஸ்திரீகள், அரன் கயிலை அங்கையில் கொண்ட திறல் ஐயன் தங்கை நிலை இங்கு இது சொல் என்று தளர்கின்றார் - சிவபெருமானெழுந்தருளியிருக்கும் கைலாஸபர்வதத்தை உள்ளங்கையிற்கொண்ட வல்லமையுள்ள ராவணேசுவரனுடைய தங்கையது [சூர்ப்பணகையினுடைய] நிலைமை இப்போது இப்படிப்பட்டதாய்விட்டதோ என்று வருந்துகின்றாராகி, இணை கொங்கை செம் கையின் மலைந்து - (தந்தம்முடைய) இரண்டு தனங்களின் மீதும் அழகிய கைகளால் மோதிக்கொண்டு, நங்கை எதிர்வந்து விழுகின்றார் - சூர்ப்பணகைக் கெதிரில்வந்து விழுகின்றார்கள், எ - று.—கையகம் என்பது அகங்கை என்று இலக்கணப்போலியாய் [நன்-சூ. 222-ஞல்] அங்கை என்றாயிற்று.

**42**.—வலம் கையில் இலங்கும் அயில் மன்னன் உளன் என்ன - பலம் பொருந்தியகையினிடத்து விளங்கும் வேலையுடைய அரசன் [இராவணன்] இருக்கிறானென்று சொன்னமாத்திரத்தில், இலங்கையில் விலங்கு உம் இவை என்று உம் எய்தல் இல -இலங்கைப்பட்டணத்தில் மிருகங்களும் இப்படிப்பட்ட துன்பங்களை ஒருகாலும்அடைதலில்லை; நம்மின் நலம் கை இல் அகன்றது சொல் - நம்மிடத்தினின்று நன்மையானது சிறிதுமின்றி நீங்கிவிட்ட

தோ, என நைந்தார் - என்றுசொல்லி வருந்தினவராகி, அம் கண் இணை கலுழ்கலினில் வாரி கலுழ்கின்றார் - அழகிய இரண்டு கண்களிலிருந்தும் எரிக்கலுழ்கலைப்போலே வெள்ளமோட அழுதார்கள் (சிலராக்ஷஸஸ்திரீகள்), எ - று.—வலங்கை - வலதுகை எனவுமாம்.

**43.**—என்று இனைய வன் துயர் இலங்கை நகர் எய்த - என்று சொல்லி இத்தன்மையவாகிய கொடுந்துன்பங்களை இலங்கா நகரத்திலுள்ளோர் அடைந்ததனாலே, நின்றவர் இருந்தவரொடு ஓடும் நெறி நேட-(அப்பட்டணத்தில்) நின்றவர்களும் இருந்தவர்களும் அதைவிட்டு ஓடிப்போவதற்கேற்ற வழிபார்க்கையில், குன்றின் அடி வந்து படி கொண்டல் என - கருமலையின் அடிவாரத்தில் வந்துபடிகின்ற கார்மேகத்தைப் போல, மன்னன் பொன் திணி கரும் கழல் விழுந்தனள் புரண்டாள் - அரசனுடைய [இராவணனுடைய] பொன்திணிக்கப்பெற்ற பெருமைபொருந்திய வீரக்கழலினையுடைய அடியில்விழுந்து புரண்டாள், எ - று.—கருங்கழல் - கருமை=பெருமை.

**44.**—இருள் படலை மூ உலகு உம் முற்ற மூடினது - (அப்பொழுது) இருட்கூட்டமானது திரிலோகங்களையும் முழுதும் மூடிக்கொண்டது; சேடன் உம் வெருக்கொடு சிர குவை செளித்தான் - (ஆயிரந்தலைகளையுடைய) ஆதிசேடனும் பயந்து தலைக்குவியலை நெளித்தான்; குல கிரி ஆடின - (அஷ்ட) குலாசலங்களும் ஆட்டங்கொடுத்தன; அருக்கன் உம் அயிர்த்தான் - சூரியனும் அஞ்சினான்; திசைகரிகள் ஓடின - திக்கஜங்களும் ஓட்டம்பிடித்தன; உம்பர் உம் ஒளித்தார் - தேவர்களும் (பயந்து) ஒளித்துக்கொண்டார்கள், எ - று.—உம்பர், இம்பர் இவை **நித்திய பதுவசனங்கள்** [எப்பொழுதும் பன்மையாகவே வழங்கப்படுவன].

**குலக்கிரிகளாவன** :—கைலாஸம், இமயம், மந்தரம், விந்தியம், நிஷதம், ஹேமகூடம், நீலம், கந்தமாதனம் என்பனவாம்; இவையன்றி மேருவுக்குக் கீழ்த்திசையில் மால்யவான், மேற்றிசையில் கந்தமாதனம், தென்றிசையில் நிஷதம், ஹேமகூடம், ஹிமாலயம், வடதிசையில் நீலம், சுவேதம், சிருங்கம் என்னும் கிரிகள் உளவென்றும் சொல்லப்படுகின்றது.

**45.**—விரிந்த வலயங்கள் மிடை தோள் படர - காந்தி விரியப்பெற்ற பாஹு வலயங்கள் நெருங்கிய புஜங்களினிடத்துப் பரவ, மீதிட்டு எரிந்த நயனங்கள் எயிறின் புறம் எரிப்ப -அவற்றின் மேல் தீப்பொறி பறக்கின்ற கண்கள் கோரதந்தங்களின் மேற்புறத்தைக் கொளுத்த, நெரிந்த புருவங்கள் இடை நெற்றியினை முற்ற - நெறித்த புருவங்கள் நடுநெற்றியிலேற, புவனங்கள் திரிந்த - உலகங்களெல்லாம் தம் நிலையில் மாறின, தேவரும் வினை அயர்த்தார் - தேவர்களும் தந்தொழிலில் சோர்ந்தார்கள், எ - று.

**46.**—தென் திசை நமன் தனொடு தேவர் குலம் எல்லாம் இன்று நமக்கு இறுதி வந்தது என நின்று இருந்த - தென்றிசைக் காவலனாகிய யமனோடு பிதிர்தேவதைகளின் குலங்களெல்லாம் இன்றைக்கு நமக்கு முடிவுவந்துவிட்டது என்று செயலற்றுநின்று இருந்துவிட்டன; உம்பரினொடு இம்பர் - விண்ணவரும் மண்ணவரும், உயிர் நடுங்கி உடல் விம்மி நிலை நில்லார் ஒன்றும் உரையாடல் இலர் - உயிர்பதைத்து உடல்குன்றி ஒருநிலையில் நில்லாதவர்களாய் ஒருவார்த்தையும் பேசத் திடமற்றவரானார்கள், எ - று.

**47.**—மடித்த பில வாய்கள் தொறு உம் புகை வந்து முந்த - (அப்போது இராவணன் கோபத்தால் கடித்து) மடித்த குகைபோன்ற வாய்களெல்லாவற்றிலிருந்தும் புகைவந்து முற்செல்லவும் [வீசவும் என்றபடி], துடித்த தொடர் மீசைகள் சுறு கொள உயிர்ப்ப - (படபடவென்று) துடித்த (சங்கிலிபோல்) தொடர்ந்துள்ள மீசைகள் சுறுக்கென்று பற்றித் தீநாற்ற மெழ (நாசி)பெருமூச்செறியவும், கடித்த கதிர் வாள் எயிறு மின் கஞல - (நறநறவென்று) கடித்த ஒளிபொருந்திய வாள்போன்ற கோரதந்தங்கள் மின்னலைப்போல பிரகாசிக்கவும், மேகத்து இடித்த உரும் ஒத்து உரறி - மேகத்தினின்று இடித்த இடியைப்போல் கர்ஜித்து, யாவர் செயல் என்றான் - (இது) யாருடைய காரியம் என்று கேட்டான், எ - று.—மீசை - இது ச்மச்ரு என்னும் வடமொழிச்சிதைவு. ஒத்து - செயவெனெச்சத்திரிபு.

**48.**—கானிடை அடைந்து புவி காவல் புரிகின்றார் - ஆரணியத்தைச்சேர்ந்து பூமியை ரக்ஷிக்கின்றவர்களும், மீனுடை நெடும் கொடியினோன் அனையர் - (அழகில்) பெரிய மீனக்கொடியையுடைய மன்மதனை யொத்தவர்களும், மேல் கீழ் ஊனுடை உடம்பு உடைமையோர் உவமை ஒவ்வா மானிடர் - விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் பிராகிருத சரீரத்தையுடையவர்கள் ஒருவரும் சமானமாகப் பெறாதவர்களும் ஆகிய மனிதர்கள், வாள் உருவி தடிந்தனர்கள் என்றாள் - வாளை யுருவி அறுத்தார்கள் என்று சொன்னாள் [சூர்ப்பணகை], எ - று.

**49.**—மானுடர் செய்தனர்கள் என - மனிதர்கள் இப்படிச்செய்தார்கள் என்று (சூர்ப்பணகை) சொல்ல, திசை அனைத்து உம் எய்த நகை வந்தது - பத்துத்திக்குகளிலும் வியாபிக்கும்படி ராவணனுக்குக் கோபச்சிரிப் புண்டாயிற்று; எரி சிந்தின கண் எல்லாம் - அவனுடைய இருபது கண்களும் தீயைக்கக்கின; (அப்பொழுது அவன் சூர்ப்பணகையைப் பார்த்து) நொய்து அவர் வலி தொழில் நுவன்ற மொழி ஒன்றுஓ - அற்பமாகிய அவருடைய வல்லமைத்தொழிலைச் சொன்ன [அறிவித்த] வார்த்தை இது ஒன்றுதானோ (இன்னுமுண்டோ), பொய் தவிர் - பொய்யை விட்டுவிடு [நிச்சயத்தைச் சொல்], பயத்தை ஒழி - பயத்தை விட்டுவிடு [பயப்படாதே], புக்க புகல் என்றான் - நடந்தவற்றை (நடந்தபடியே) சொல் என்று சொன்னான், எ-று.

**50.**—மணி மேனி மன்மதனை ஒப்பர் - (அவர்கள்) அழகிய உருவத்தில் மன்மதனை யொப்பார்கள்; திரள் தோளின் வலி தன்னால் வட மேரு தன் எழில் அழிப்பர் - திரண்ட புஜபலத்தினாலே வடக்கின்கணுள்ள மேருபருவதத்தினது வலிமையும் கெடுப்பார்கள்; அதனை இப்பொழுது என் இசைப்பது - அந்தப்பிரபாவத்தை இப்பொழுது என்னென்று சொல்வது [எப்படிப்பட்டதென்று சொன்னாலு முடியாது என்றபடி]; கனி வில்லான் உலகு எழில் நல் மதன் அழிப்பர் - (தங்கள் கையிற்கொண்ட) பெரிய வில்லினாலே ஸப்தலோகங்களிலு முள்ளவர்களுடைய நல்லவலிமையையுங் கெடுப்பர்கள், எ-று.—இங்கே மேனியில் மன்மதனை ஒப்பர் என்றதனாலே அவன் அநங்கனாவதற்கு முந்தியகாலத்துப் பெற்றிருந்த மேனியை உவமானமாகச் சொன்னதெனவறிக.

**51.**—முனி தலைவர்பால் வந்தனை உடையர் - (அவர்கள்) முனிசிரேஷ்டரிடத்திலேயே வந்தனையுடையவர்கள் [மற்றவரை வணங்காரென்றபடி]; வானத்து இந்துவின் முகத்தர் - ஆகாசத்திலுள்ள சந்திரனுக்கு சமானமாகிய திருமுகங்களையுடையவர்கள்; எறி நீரில் எழு நாள கந்த மலரை பொருவு கண்ணர் - (ஓயாமல் அலைகளை) வீசுகின்ற நீரையுடைய கடலிலே தண்டையுடைய வாசனைபொருந்திய தாமரைமலரையொத்த திருக்கண்களையுடையவர்கள்; கழல் கையர் - (எறிநீரிலெழுகந்த மலரைப்பொருவு) திருவடிகளையும் திருக்கைகளையு முடையவர்கள்; அந்தம் இல் தவ தொழிலர் - அபாரமான தவத்திற்கடுத்த காரியங்களை யுடையவர்கள்; அவரை ஒப்பார் ஆர் - அவர்களுக்குச் சமானராகத் தக்கவர்களார் இருக்கிறார்கள் [ஒருவருமிலர் என்றபடி], எ-று.—கண்களுக்குக் கூறப்பட்ட விசேஷணத்தைக் கழல்களுக்கும் கைகளுக்கும் கூட்டுக. Cf.

"அம்பரந்தாமரை பூத்தலர்ந்தன்ன வவயவரை."
"வாய்கண்கை யுந்திபதங், கோக னகம்பத்தினார்."

**52.**—வற்கலையர் - (அவர்கள்) மரவுரிதரித்தவர்கள்; வார் கழலர் - நீண்ட வீரகண்டை யணிந்தவர்கள்; மார்பின் அணி நூலர் - மார்பினிடத்திலே அணிபப்பட்ட முப்புரிநூலை யுடையவர்கள் [யஞ்ஞோபவீதந் தரிக்கப்பெற்ற திருமார்பை யுடையவர்கள்]; வில் கலையர் - தனுர்வேத பாரங்கதர்கள்; வேதம் உறை நாவர் - நான்குவேதங்களும் வஸிக்கப்பெற்றநாவையுடையவர்கள் [ஸமஸ்தவேதங்களையும் ஓதி யுணர்ந்தவர்கள் என்றபடி]; கனி மெய்யர் - மிகுந்த ஸத்தியஸந்தர்கள்; உற்கு அலையர் - உனக்கு அஞ்சாதவர்கள்; உன்னை ஒரு துகள் தனை உம் உன்னார் - உன்னை ஒரு அணுவளவும் மதியாதவர்கள்; சொல் கலை என தொலைவு இல் தூணிகள் சுமந்தார் - சொற்கள் நிறைந்த சாஸ்திரங்களை (மனதில் தாங்கிக்கொண்டிருப்பது) போல முடிவில்லாத அம்பறுத்தூணிகளை (தோளில்) சுமந்தவர்கள், எ-று.—வற்கலை - தற்பவம்.

**53.**—ஏறு நெறி அந்தணர் - ஞானமார்க்கத்தில் உயர்ந்த ரிஷிகள், அரக்கரை ஆறு புலன் அஞ்சினம் என சென்று இயம்ப - இராக்ஷஸருக்கு (இயம நியமப் பிராணாயாமாதிகளாலே கோபமுதலியவை) தணியப்பெற்ற எமது ஐம்புலன்களாலும் பயந்தோம் என்றுபோய் விண்ணப்பஞ்செய்ய, உலகு எல்லாம் வேறும் எனும் நுங்கள் குலம் வேரொடு உம் அடங்க கோறும் என முந்தை ஒரு சூளுரவு கொண்டார்-எல்லாவுலகங்களையும் வெல்லுவோமென்றுசொல்லுகிற உங்கள்வமிசமானது [ராக்ஷஸவமிசமானது] அடியோடே அழிந்து போம்படி ஸம்ஹரிப்போமென்று பூர்வத்தில் திடமாகப் பிரதிக்கினை செய்துகொண்டவர்கள், எ - று.—அரக்கரை - வேற்றுமை மயக்கம். அந்தணர் - என்பது அழகிய தட்பத்தினையுடையார் எனவும்; அந்தத்தை அணவுவார், அதாவது வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பவர் எனவும் பொருள்படும். வேறும், கோறும் - தன்மைப்பன்மை வினைமுற்றுகள்; வெல், கொல்-பகுதிகள்.

**54.**—ஐயா - அண்ணா, ஓர் உலகின் வாழ்வார் மாரர் இருவர் உளா எ - ஒருவுலகத்தில் சரீரத்தோடுகூடி வாழ்பவர்களாகிய இரண்டு மன்மதர்களும் இருக்கிறார்களா? [இரார்]; அவரின் வில்அதனில் வல்லார் வீரர் உளர் எ- அவ்விருவரைப்பார்க்கிலும் வில்வித்தையில் வல்லவர்களாகிய சுத்தவீரர்களு மிருக்கிறார்களா? [இல்லை]; அன்னவரை ஒப்பவர்கள் ஆர் ஒருவர் - அவர்களுக்குச் சமானமானவர் யாரொருத்த ரிருக்கிறார்? [ஒருத்தருமில்லை]; ஓர் ஒருவர் எ இறைவர் மூவரை உம் ஒப்பார் - அவர்களில் ஒவ்வொருவருமே திரிமூர்த்திகளையும் ஒத்திருக்கிறார்கள், எ - று.

**55.**—தராவலயநேமி உழவன் பரவ அருநலத்து தயரதபேர் ஒருவன் மைந்தர் - பூமண்டலத்தில் சக்கிரவர்த்தியாகிய துதித்தற்கரிய நல்லொழுக்கத்தையுடைய தயரதனென்னும் பெயரையுடைய ஒருவனுக்குப் புத்திரராயுள்ளவர்கள்; பழி இல்லார் - ஒருபழிப்பு மில்லாதவர்கள்; அவன் விளம்ப விராவ அரு வனத்து உறைகின்றார் - அத்தயரத சக்கிரவர்த்தி நியமித்ததனால் சஞ்சரித்தற்கரிய அரணியத்தில் வசிக்கின்றார்கள்; பெயர் இராமன் உம் இலக்குவன் உம் என்பர் என்றாள் - அவர்கள் பெயர் இராமலக்ஷ்மணர் என்பார்கள் என்று சொன்னாள் (சூர்ப்பணகை), எ - று.— தராவலயம்[=தரா-வலயம்] வடநூன்முடிபு. தயதரன் பேர் என்பது "சில விகாரமாமுயர்திணை" [நன்・சூ. 159] என்பதனால் ஈறுகெட்டு வருமொழி முதல்வல்லெழுத்து மிக்குமுடிந்தது. பராவ, விராவ என்னும் செயவெனச்சங்களின் ஈறு தொகுத்தல். இலக்குவன் - லக்ஷ்மண சப்தபவம்.

**56.**—மருந்து அனைய தங்கை மணி நாசி வடி வாளால் அரிந்தவர் உம் மானிடர் - அருமருந்தனைய என்தங்கையின் மூக்கைக்கூரியவாளால் அரிந்தவர்களும் மனிதர்களாம்; அரிந்து உம் உயிர் வாழ்வார் - அப்படியரிந்தும்

இன்னும் உயிர்பிழைத்திருக்கிறார்களாம்; விருந்து அனைய வாளொடு உம் விழித்து - விருந்துக்கொப்பாகிய என் உடைவாளோடும் கண்களைவிழித்துக்கொண்டு, இறை உம் வெள்காது - சிறிதும் நாணாமல், இராவணன் உம் உயிர்கொடு இன்னும் இருந்தனன் - இராவணனாகிய யானும் இனியபிராணனோடு இன்னுமிருக்கிறேன் (ஆ ஆ! இஃதென்ன ஆச்சரியம்); எ - று.— இருந்தனன் -ஒருமைத்தன்மை வினைமுற்று, அன் -விகுதி [நன். சூ. 140].

**57.**—கொற்றமது முற்றிவலியால் அரசுகொண்டேன்-வெற்றிமுதிர்ந்து புஜபலபராக்கிரமத்தினாலே இவ்விலங்கா ராஜ்யத்தைக் கைக்கொண்டு, ஒல்காமுறைஇறந்தேன் - குறையாத நீதிமுறைப்படி நடந்த யான், உற்றபயன்மற்று இஃது - அடைந்த பலன் இதுவோ; உலகத்து முதல் வீரர் முடி எல்லாம் முற்ற அற்ற பொழுதத்து - உலகத்திலுள்ள சுத்த வீரர்களுடைய தலைகளெல்லாம் முழுதுமறுபட்ட காலத்திலும், இது பொருந்தும் எனல் ஆம் எ - இந்த அவமானம் எனக்கு நேரலாமென்று சொல்லத்தகுமோ? எ - று.

**58.**—மூளும் உளுது ஆப பழி என்வயின்முடித்தோர் (நினைக்குந்தோறும் கோபத்தால் உடம்பை) எரிக்கத்தக்கதும் (என்றைக்கும்) உள்ளதுமாகிய பழியை என்திறத்திற் செய்தவீரர்களுடைய, ஆள் உம் உள ஆம் - சரீரங்களுமிருக்கின்றனவாம், அவரது ஆர் உயிர் உம் உண்டாம் - அவர்களுடைய அரிய உயிரும் இன்னும் இருக்கிறதாம்; வாள் உம் உளது-என்கையில் வாளுமிருக்கின்றது, ஓத விடம் உண்டவன் வழங்கும் நாள் உம் உள - (பாற்) கடலிற் றோன்றிய விஷத்தை யுட்கொண்ட சிவபெருமான் அருளிய ஆயுள் நாள்களும் இருக்கின்றன,தோள் உம் உள-இருபது தோள்களுமிருக்கின்றன, நான் உம் உ,ளன் அன்று ஓ - நானு மின்னுமுயிரோடிருக்கிறேனல்லவா (இதென்ன ஆச்சரியம்), எ - று.

**59.**—மனனே! புத்தறவு உற பழி புகுந்தது என நாணி தத்து உறுவது என்னை - மனதே! புதிதாகமிகப்பழி நேரிட்டதென்று வெட்கமடைந்து தடுமாறுவது என்? தளரல் - நீவருந்தாதே; இனி - இனிமேல், பழி சுமக்க - பழியை தாங்க, தலை பகுதி பத்து உள - என் தலைகள் பத்திருக்கின்றன, தோள்கள் பல உள-என் தோள்கள் அனேகமிருக்கின்றன, (ஆகையால்) உனக்கு எ துயர் உள - உனக்கு என்ன வருத்தங்கள் இருக்கின்றன [ஒன்றுமில்லை], எ - று.—அம்மா - வியப்பிடைச்சொல்.

**60.**—என்று உரை செயா நகை செயா எரி விழிப்பான்-என்றுசொல்லிச்சிரித்து தீப்போலக்கண்களைத்திறந்து, நெடிய குன்று உடைய கானில் நின்ற கரன் எ முதலினோர் நிருதர் -பெரிய பர்வதங்களையுடைய (தண்டக) அரணியத்தில் பேர்பெற்று நின்ற கரன் முதலிய ராக்ஷஸர்கள், வன் துணை இலா இருவர் மானுடரை வாளால் கொன்றிலர்களா என்றான்-வலியதுணை

யில்லாத் இரண்டு மனிதரை வாளினால் வெட்டிக்கொன்றுவிடவில்லையா என்று சொன்னான் ; எ - று.

**61.**—அற்று அவன் உரைத்தலோடு உம் - அவ்வாறு அவன் சொன்ன வுடனே, அழுது இழி அருவி கண்ணள் - அழுவதனால் பெருகிய அருவி பொருந்திய கண்களை யுடையவளாய், எற்றிய வயிற்றள் - மோதப்பட்ட வயிற்றை யுடையவளாய், பாரினிடை விழுந்து ஏங்குகின்றாள் - பூமியி னிடத்தில் விழுந்து அழுதவளாகி, ஐய சுற்றம் உம் நொய்து தொலைந்தது என சுமந்த கையள் - அண்ணா! நமது பெரியசுற்றமும் இலேசாய் அழிந்து போய்விட்டதென்று சொல்லித் தலை மேற் கையை யுடையவளாகி, உற்றது தெரியும் வண்ணம்-(அவர்க்கு) நேர்ந்தஆபத்து ராவணனுக்குத் தெரியும்படி, ஒருவகை உரைக்கல் உற்றாள் - ஒருவாறு சொல்லத் தொடங்கினாள்; எ-று.

இதுமுதல் 85 - ம் பாட்டுவரையில் அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத் தங்கள்.

**62.**—சொல் என்று என்வாயில் கேட்டார்-(நடந்தசங்கதியைச்) சொல் என்று சொல்லி என்வாயில் வார்த்தையைக்கேட்டு,தொடர்ந்து எழு சேனை யோடு உம் கல்லென்ற ஒலியின் கரன் முதல் காளை வீரர் சென்றார்-ஒன் றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து சென்ற சேனையுடனே கல்லென்ற சத்தத் தோடே கரன்முதலியசுத்தவீரர்கள் போர்க்குச்சென்றவர்களாகி, எல் ஒன் று கமல செம் கண் இராமன் என்று இசைத்த ஏந்தல் வில் ஒன்றின் கடிகை மூன்றின் ஏறினர் விண்ணில் என்றாள்-சூரியனைப்பொருந்திய செந்தாமரை போன்ற சிவந்த கண்களையுடைய இராமனென்று சொல்லப்பெற்ற பெரு மையிற் சிறந்தோனுடைய ஒரு வில்லினால் மூன்று நாழிகைக்குள் பரமபத மடைந்தார்கள் என்று சொன்னாள் ; எ - று.

**63**—தமியன் செய்த போரிடை - ஒண்டிக்காரனாகிய இராமன் செய்த சண்டையில், தாருடை தானையோடு உம் தம்பியர் மடிந்தார் என்ற உரை செவி புகாதமுன்னம் - ரணக்கொடிகளையுடைய சேனையுடனே தம்பிமா ரிறந்தா ரென்ற வார்த்தை அவன்செவியிற் புகுந்தும் புகாததற்கு முன்னே [புகுந்த வுடனே], நிரை நெடும் கண்கள் எல்லாம் - வரிசையாயிருக்கின்ற விசாலமாகிய கண்களெல்லாம் [இருபது கண்களும்], காரிடை உரும் மின் மாரி கனலொடு பிறக்கும் ஆ போல் நீரொடு நெருப்பு கான்ற - மேகத்தி னிடத்தில் இடியும் மின்னலும் மழையும் தீயுடனுண்டாகு மாறுபோல நீரோடு நெருப்பையும் கக்கின ; எ - று.

**64.**—அ இடை எழுந்த சீற்றத்து அழுந்திய துன்பம் - அப்பொழுது அவனுக்குண்டாகிய கோபத்திலே பதிந்த மனவருத்தமானது, அழி தீயிடை உருக்கும் நெய்யில் சீற்றத்திற்கு ஊற்றம் செய்ய - படபா நலத்திலே [பெருந்தீயிலே] நெய்யை யூற்றினதுபோல அவனுடைய கோபத்திற்கு

மிகுதியைச் செய்ய [கோபத்தை யதிகரிப்பிக்க], (சூர்ப்பணகையை நோக்கி) அவர் நின்னை இன்னே வாயிடை இதழ் உம் மூக்கு உம் வலிந்து கொய்ய நீ இடை இழைத்த குற்றம் என்னை சொல் என்றான் - அவர்கள் உன்னை இப்படி உதட்டையும் மூக்கையும் பலாத்காரமாய் அறுக்கும்படி நீ நடுவே செய்த தப்பிதம் என்னதான் என்று கேட்டான் [இராவணன்], எ - று.

**65.**—என்வயின் உற்ற குற்றம் - என்னிடத்துப் பொருந்திய குற்றமானது, யாவர்க்கு உம் எழுத ஒண்ணாத தன்மையன் இராமனோடு உம்-எப்படிப்பட்டவராலும்(சித்திரத்திலும்)எழுதமுடியாத வடிவழகையுடைய இராமனோடு, தாமரை தவிர போந்தாள்-தாமரை மலரானது தனியாயொழிய அதைவிட்டு வந்தவளும், மின்வயின் மருங்குல் கொண்டாள் - மின்னலினிடத்து இடையைப்பெற்றவளும், வேய்வயின் மென் தோள் கொண்டாள்-(பச்சை) மூங்கிலிடத்து மெல்லிய தோளைப்பெற்றவளும், பொன்வயின் மேனி கொண்டாள் பொருட்டினால் - பொன்னினிடத்து வடிவைப்பெற்றவளும் ஆகிய ஒருத்தி நிமித்தமாக, புகுந்தது என்றாள்-(நான் அவ்விடம்) போனதுதான் என்றுசொன்னாள் (சூர்ப்பணகை), எ - று.—மின்வயின் மேனிகொண்டாள் என்பது முதலியவற்றிற்கு உபமானமே கருத்தாகக் கொள்க.

**66.**—ஆர் அவள் என்னலோடு உம் - அவள்யாரென்று (இராவணன்) கேட்டவுடனே, அரக்கி உம் - ராக்ஷஸியும் [சூர்ப்பணகையும்], ஐய ! ஆழ்ந்து தேர்-அண்ணா ! நான்சொல்லுகிறதை தீர்க்கமாய் ஆலோசி; அவள் திரண்ட கொங்கை செம் பொன் செய் குலிக செப்பு-அவளுடைய திரண்ட ஸ்தனங்கள் செம்பொன்னாற் செய்யப்பட்டு இங்குலிகம் பூசப்பெற்ற கிண்ணங்களாம் ; பார் அவள் பாதம் தீண்ட பாக்கியம் படைத்தது-பூமியானது அவளுடை பாதம் தன்னிடத்துப் பொருந்தும்படியான பாக்கியத்தைப் பெற்றது ; அவள் பேர் சீதை என்று - அவளுடைய பெயர் சீதை என்று சொல்லி, வடிவு எல்லாம் பேசல் உற்றாள் - அவளுடைய வடிவழகையெல்லாந் தனித்தனி யெடுத்துச்சொல்லத் தொடங்கினாள், எ - று.

**67.**—காமரம் முரலும் பாடல் - வண்டுகளைப்போல பாடும் பாடல்களையும், கள் என கனிந்த இன் சொல்-தேன்போல முதிர்ந்த இனியசொல்லையும் [மிகவும் இனியசொல்லையும்], தே மலர் நிரந்த கூந்தல் - தேன்பொருந்திய மலர்கள் நெருங்கப்பெற்ற கூந்தலையுமுடைய (அந்தப்பெண்ணானவள்), தேவர்க்கு உம் அணங்கு ஆம் என்ன - தேவர்களுக்கும் தெய்வமாகும் என்றுசொல்லி, தாமரை இருந்த தையல் - தாமரைமலரில் வீற்றிருந்த இலட்சுமியும், சேடி ஆம் தரம் உம் அல்லள் - (அவளுக்கு) தோழியாகத் தக்கவளாயு மற்றவளானாள் (என்றால்), யாம் உரை வழங்கும் என்

பது (அவளுடைய வடிவழகை) யாமெடுத்துச் சொல்லுவோமென்பது, ஏழமை பாலது அன்று ஓ - அறியாமையின் பாற்பட்டதல்லவா; எ-று — என்ன - காரணப் பொருட்டாகிய வினையெச்சம். யாம் என்றது யானும் என்போன்றவர்களும் என்றதாம். ஆம் என்பதை முற்றாக்கி, என் அ எனப் பிரித்துப் பொருளுரைப்பினும் பொருந்தும்.

**68.**—ஐய-அண்ணா! அளக ஓதி மஞ்சு ஒக்கும் - அவளுடைய கூந்தல் கொண்டை மேகத்திற்குச்சமானமாயிருக்கும்; வடித்த கூந்தல் மழை ஒக்கும் - வாரிவிடப்பட்ட தலைமயிரானது மழைக்காலையொத்திருக்கும்; அடிகள் பஞ்சு ஒக்கும்-பாதங்கள் செம்பஞ்சை யொத்திருக்கும்; விரல்கள் பவளத்தின்செய்ய-(கைகால்களின்) விரல்கள் பவளக்கொடிகளைப்பார்க்கிலும் சேவந்தன; அம் சொற்கள் அமுதில் அள்ளிக்கொண்டவள்-அழகிய சொற்களை அமிர்தத்திலிருந்து வாரிக்கொண்டவள்; வதனம் மை தீர் கஞ்சத்தின் அளவிற்று என் உம் - முகமானது குற்றமற்ற தாமரையினதளவாயினதாயினும், கண்கள் கடலின் உம் பெரிய - (அவளுடைய) கண்கள் சமுத்திரத்தைப்பார்க்கிலும் பெரியவைகள், எ - று.

**69.**—அநங்கன் ஈசனார் கண்ணின் வெந்தான் என்னும் இது இழுதை சொல் - மன்மதன் சிவனுடைய நெற்றிக்கண்ணால் (சுடப்பட்டு) வெந்தான் என்று சொல்லுமிது பொய்வார்த்தை; (பின்னை அவன் எப்படி இறந்தான் என்றால்) இ வாசம் நாறு ஓதியாளை கண்டனன்-இயற்கை மணம் வீசுகின்ற கூந்தலையுடைய இந்தச் சீதையைப் பார்த்து, வல்ல ஆற்றால், ஒருவராற்கூடிய திறத்தினால், பேசல் ஆம் தகைமைத்து அல்லா பெரும் பிணி பிணிப்ப-சொல்லி முடியாத பெரிய (காம) நோயானது தன்னைவருத்த, நீண்ட ஆசையால் - மிகுந்த ஆசையினாலே, அ உருவம் அழிந்து தேய்ந்தான் - அந்தவடிவம் தேய்ந்து மாய்ந்தான்; எ - று.

**70.**—தெவ் உலகத்து உம் காண்டி - (உனக்குப்) பகைவராகிய தேவர்களுடைய உலகத்திலும் நீ பார்; சிரத்தினில் பணத்தினோர்கள் அ உலகத்து உம் காண்டி - தலையில் படத்தை யுடையவர்களாகிய நாகருடைய லோகத்திலும் பார்; அலை கடல் உலகில் காண்டி-அலைகளையுடைய கடலாற் சூழப்பட்ட பூலோகத்திலும் பார்; வெம் உலை உற்ற வேலை வாளினை வென்ற கண்ணாள் - எரிகின்ற வுலை முகத்தில் காய்ச்சப்பட்ட வேலையும் வாளையும் ஒத்த கண்களையுடைய இவள், இ உலகத்தாள் - இப் பூலோகத்தவளே; (ஆயினும்) அங்கம் யாவர்க்கு உம் எழுத ஒணாதாள்-யாவராலும் சித்திரத்திலும் எழுதமுடியாத திவ்வியாவயவங்களை யுடையவள்; எ-று.

[தொடர்ச்சி]

# கிஷ்கிந்தா காண்டம்.

*கிஷ்கிந்தம் என்பது ஓர்மலே. அம்மலேயைச்சேர்ந்த நாடும் அப்பெயர் பெற்றது ; அதன் பிரதான பட்டணத்துக்கு கிஷ்கிந்தை என்று பெயர். இது வாலி சுக்கிரீவர்களுக்கு இராஜதானியாயிருந்தது. காண்டம்=கூட்டம், வடசொல். அது இங்கு சரித்திரத்தின் ஒரு பாகத்தை யுணர்த்துஞ் செய்யுட்களின் கூட்டம் என்று விசேஷமாகக் கொள்ளத்தக்கது ; ஆகவே கிஷ்கிந்தையில் நடந்த விருத்தாந்தங்களைத் தெரிவிக்கும் பாகமென்பது திரண்டபொருள்.

## பம்பைப் படலம்.

† பம்பை என்பது ஒரு பெரிய பொய்கை (23). அது கிஷ்கிந்தா நகரத்துக்கருகிலுள்ளது. படலம் என்கிற வடசொல்லுக்கும் கூட்டமென்பதேபொருள் ; ஆயினும் அது சங்கேதத்தால் ஒரு பெரிய வகுப்பினுட்பட்ட சிறிய பாகத்தைக் குறிக்கும். ஆகவே, இராமலக்ஷ்மணர்கள் பம்பா புஷ்கரிணியைக் கண்டது முதலிய கதையைச் சொல்லும் சிறிய பிரிவென்றதாயிற்று.

**1.**—(இதன்பொருள்.)—மூன்று உரு என- ரூபம் மூன்றென்பதுபோல, குணம் மும்மை ஆம்-குணங்களும் மூவகையாகப் பெற்ற, முதல் - முதற்பொருளும், தோன்று உரு எவை உம் - உண்டாகிய சகலப்பிராணிகளும் [சிருஷ்டிவர்க்கமெல்லாம்], இ முதலே சொல்லுதற்கு - இந்த முதற்பொருளை எடுத்துச் சொல்வதற்கு, என்ற உரு அமைந்தவர் - தகுந்த அழகை (இலக்கணத்தை) யுடையவரென்று சொல்லப்பட்ட (பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்கிற) திரிமூர்த்திகளுக்குள், இடையில் சான்று நின்றவன்-மத்தியில் சாக்ஷிபூதனாக நின்றவனும், (ஆகிய), உலகம் தாயினன் - உலகத்தை (ஓரடியால்) தாவியளந்தருளின திரிவிக்கிரமனே [ஸ்ரீமந்நாராயணனே], உலகினுக்கு உரு - உலகத்துக்குக் கருக்காரண மானவன், எ - று. உரு - கரு அதாவது ஆதிகாரணம் என்றபடி. Cf. " எப்பொருட்குங் கருக்காரணமும்." " ஆதிபகவன் முதற்றேயுலகு."

இது காப்பு.—காப் பென்றால் இரக்ஷிப்பு. கவிதனக்கு நேரிடும்படியான இடையூறுகளை நீக்கித் தன் எண்ணத்தை முடிக்கவல்லதோர் பொருள் என்பது கருத்து. இது கடவுளின் துதி. இதனை வடநூலார் மங்களாசரணை என்பர். அது

---

* இது மைசூருக்குச் சற்று வடக்கே இருக்கவேண்டுமென் றூகித்துச் சொல்லுகிறார்கள்.

† இது இக்காலத்தில் ஓர் ஆறுய்ப்பெருகுகிறதென்று கேள்வி.

"வாய்த்த நூன் முகத்து ளாக்கு மங்களாசரணை
வாழ்த்து வணக்கோடு வத்துநிர்த்தேச மெனமூன்(று)"

என்றபடியே வாழ்த்து, வணக்கம், வத்துநிர்த்தேசம் [என மூன்று வகைப்படும். அவற்றுள் இது வத்துநிர்த்தேச மங்களமாம். வாழ்த்து, வணக்கம், வத்துநிர்த்தேசம் என்பனவற்றை முறையே ஆசிஸ், நமஸ்க்ரியை, வஸ்துநிர்த்தேசம் என்பர் வடநூலார்.

**2.**—தேன்படி - தேன்பொருந்திய, மலரது - தாமரை முதலிய மலர்களையுடையது ; செம் கண் - சிவந்த கண்களையும், வெம் கை- வெப்பம்பொருந்திய துதிக்கையையு முடைய, மா - (மதித்த) யானை, தான் படிகின்றது - தன்னிச்சையாய் வந்து படியப்பெற்றது ; தெளிவு சான்றது- தெளிவுமிக்குள்ளது ; (ஆதலால்) மீன்படி - மின்னல் பொருந்திய, மேகமும் படிந்து - மேகமும் படிய, வான் படிந்து - ஆகாசமும் பிரதிபிம்பங் காட்ட, வீங்கு நீர் - மிகுந்த நீரையுடைய கடலானது, உலகிடை கிடந்த மாண்பது-பூமத்தியத்திலே தங்கியிருந்த தன்மையை யுடையது ; எ - று.

யானை மதித்திருக்கும்போது அதன் கண் சிவந்தும் துதிக்கைவெப்பமாயுமிருக்குமென்று யானைப்பாகர் சொல்லுவர்.

கீழ் ஆரண்யகாண்டத்தின் கடைசிப்பாட்டில் "பம்பையாம் பொய்கை கண்டார்" என்று கூறப்பட்டிருக்கிறதனுல் இதுமுதல் 16-ம் பாட்டுவரையில் 'அது' என்பதை தோன்றா எழுவாயாகக்கொண்டு முடிபறியவேண்டும்.

**3.**—ஈர்ந்த - அறுக்கப்பட்ட, நுண் - நேர்மையான [அச்சமான], பளிங்கு என தெளிந்த - பளிங்குபோலத் தெளிவுற்ற, ஈர்ம் புனல் - குளிர்ந்த ஜலமானது, பேர்ந்து ஒளிர் - இடையிட்டுப் பிரகாசிக்கின்ற, நவமணி - நவரத்தினங்களும், படர்ந்த - பதித்துப் பரவிய, பித்திகை - (படித்துறைச்) சுவர்களில், சேர்ந்தஉழி சேர்ந்தஉழி- சேருந்தோறும், நிறத்தை சேர்தலால்- அவ்வம் மணிகளின் நிறத்தை யடையதலால் [ஒன்றிலும் பற்றில்லாமல் என்றபடி], ஓர்ந்து - பல நூல்களைக்கற்றும், உணர்வில்லவர் - தத்துவ ஞானமில்லாதவர்களுடைய, உள்ளம்-மனதை, ஒப்பது - ஒத்தது, எ - று.— நவமணி - ஆரியத்தொடர்மொழி. நவமணிகளாவன :—வஜ்ரம், வைடூரியம், மரகதம், மாணிக்கம், நீலம், கோமேதகம், புஷ்பராகம், முத்தம், பிரவாளம் என்பனவாம்.

**4.**—குவால் - கூட்டமாகிய, மணி - முத்துக்களையுடைய, தடம் தொறும் - (அத்தடாகத்தின்) இடமெல்லாம், பவள கால் - பவளம்போற் சிவந்த கால்களையும், இவர் கவான் - விரும்பத்தக்க தொடைகளையு முடைய, அரசு அன்னமும்-ராஜ ஹம்ஸமும், பெடையும் - அதன் ஸ்திரீயும், காண்டலில் - காணப்படுதலால், தவா - கெடாத, நெடு வானகம் நயங்கும் - அக

ன்ற ஆகாயத்தில் விளங்குகின்ற, மீனொடும்-உரோகிணி நக்ஷத்திரத்துடன், உலப்பிலது-அழிவில்லாததாகிய [தேய்வில்லாத], உவாமதி-பூர்ணசந்திரன், உதித்தது ஒப்பது- உதித்ததை ஒத்தது; எ - று.—கவான் - இது கவீந் என்னும் வடமொழிச்சிதைவு. இது வேதத்தில் வழங்குமொழி.

**5.**—ஓத நீர் உலகமும் - கடலாற் சூழப்பட்ட வுலகத்தையும், உயிர்கள் யாவையும் - ஸகலப் பிராணிகளையும், வேதபாரகரையும் - அந்தணர்களையும், காதிகாதலன் - காதிமைந்தராகிய விசுவாமித்திரர், விதிக்க வேட்ட நாள் - சிருஷ்டிக்க விரும்பியகாலத்தில், சீதம் வீங்கு உவரியை - குளிர்ச்சி மிகுந்த உப்புசமுத்திரத்தை, செருக்கும் ஆறு - (செருக்கை) அழிக்கும்படி, தரு-(அவரால்) சிருட்டிக்கப்பட்ட, ஒரு கடலின் அன்னது-ஒப்பற்ற சமுத்திரத்தை [நல்லதண்ணீர்ச்சமுத்திரத்தை] யொத்தது ; எ - று.

விசுவாமித்திரரைக்குறித்த விசேஷங்களை புராணநாமவிவரணம் என்னும் தலைப்பில் விசுவாமித்திரர் என்னும் பெயரிற்காண்க.

**6.**—எல் பொரு- (ஒளியால்) சூரியனைச்செயிக்கும், நாகர் தம் இருக்கை நாகர் வசிக்கும் பாதாள லோகமானது, ஈது என நிற்பது ஓர் காட்சியது எனின் உம் - இது வென்று சொல்லத்தக்க காட்சியை யுடைய தாயினும், கற்பகம் அனைய - (நினைத்தவற்றைக் கொடுக்கும்) கற்பகத்தருப்போன்ற, அ - அந்த, கவிஞர் காட்டிய - கவிவாணரால் தெரிவிக்கப்பட்ட, சொல் பொருள் ஆம் என - நூற்பொருள் போல், கீழ்உற - பாதாளம் வரைக்கும், தோன்றல் சான்றது - விளங்குவது ; எ - று.—இங்கு அகரச்சுட்டு பிரஸித்தியைக் காட்டி வால்மீகிபகவானைக்குறித்து நின்றது.

**7.**—களம் நவில் அன்னமே முதல - அவ்யக்த மதுரமாக ஒலிக்கின்ற அன்னங்கள் முதலிய, கண் அகல் - இடமகன்ற, தள மலர் - இதழ்களையுடைய மலரிலிருக்கும், புள்ளொடு - நீர்ப்பறவைகளோடு, தயங்க - விளங்குவதனால், இன்னது ஓர் கிளவி என்று அறிவு அரும் - இப்படிப்பட்டதாகிய ஒருவகைப் பட்சியினுடைய தொனியென்றறிதல் கூடாத, கிளர்ச்சித்து ஆதலால் - எழுச்சியை யுடையதாகையால், வள நகர் - பல வளப்பங்களும் பொருந்திய பட்டணத்தினது, கூலம் போலும் - கடைவீதியையொத்த, மாண்பது-மாட்சிமையை யுடையது; எ-று.—களநவிலன்னம் (கலஹம்ஸம்), பவளக்காலிவர்கவ்வானரசன்னம் (ராஜஹம்ஸம்)-இவை அன்னத்தின் பேதங்கள்.

**8.**—அரி - வண்டுகள் குடைவதனாலே, மலர்-விரிந்த, பங்கயத்து - தாமரைமலர்களிலுள்ள, அன்னம் - அன்னப்பறவைகள், எங்கணும் -எவ்விடத்திலும், புரிகுழல் - மாலையால் கட்டப்பட்ட கூந்தலையுடைய சீதாப்பிராட்டியார், புக்க இடம் - சென்ற இடத்தை, புகல்கிலாமையால்-சொல்ல மாட்டாமையால், திருமுகம் - ஸ்ரீராமபிரானது திருமுகத்தை, நோக்கலம் பாரா

மல், இறந்து நீர்தும் என்று-இறந்து விடுவோமென்று, எரி புகுவன என - தீப்பாய்வனபோல், தோன்றும் ஈட்டது - காணப்பெற்ற பெருமையை யுடையது ; எ - று.—இலக்குமியாகிய சீதாப்பிராட்டியாருக்கும் அன்னங்களுக்கும் உறைவிடம் தாமரை மலரேயாதலால் இவைகளறியவேண்டிய அவள் செய்தியை அறியாமையாகிய குற்றம்பற்றி எரிபுகுவனபோலும் என்றார். 'புரிகுழல்' - அன்மொழித் தொகை. 'அரிமலர்' என்பதற்குச் சூரியனால் விகஸித்தமலர் எனவும் பொருள் கொள்ளலாம்.

9.—அடை - தன்னிடத்திலுள்ள, காசு - இரத்தினங்களை, விளக்கிய - விளங்கச் செய்த, காட்சித்து ஆயினும் - காட்சியை யுடையதாயினும், மாசு அடை - குற்றம் பொருந்திய, பேதமை - அஞ்ஞானமானது, இடை - மத்தியில், மயக்கலால் - மயங்கச்செய்தலால், ஆசுஅடை - (இடையிலே) அற்பத்தன்மையடைந்த, நல்லுணர்வு அனையது ஆம் என-மெய்யுணர்வை யொத்ததென்று சொல்லும்படியாக, பாசடை - பசியஇலைகளானவை, வயின் தொறும்-இடங்கள் தோறும், பரந்த பண்பது - பரவப்பெற்ற தன்மையை யுடையது ; எ - று.

10.—களிப்பு அடா-களிப்பில்லாத, மனத்தவன் - மனத்தையுடைய காகுத்தனானவன், காணில் - கண்டால், கற்புஎனும் - கற்பே உருக்கொண்டு வந்த தென்னத்தக்க, கிளி படு ஆம் மொழியவள்- கிளியும் தாழ்ந்துபோகத் தக்க மொழியையுடைய சானகியினது, விழியின் கேள் என - கண்களுக்கினங்களென்று, துளிபடா - (முன் ஒருகாலத்தும் சோகத்தால்) நீர்த்துளி யுண்டாகாமலிருந்த, நயனங்கள்—ஸ்ரீராமபிரானது நேத்திரங்கள், துளிப்ப - நீர் சிந்த, சோருமென்று - (அவன்) வாடுவானென்று, ஒளிப்படாது -பிரகாசியாமல் [வெளிப்படாமல்], அ இடை - அவ்விடத்தில், ஒளிக்கும் மீனது - மறைந்து கொள்ளு மீன்களையுடையது; எ - று.

11.—கழை படு- மூங்கிலிலுண்டாகும், முத்தமும் - முத்துக்களையும், கலுழி - கான்யாற்றினுடைய, கார் - நீர் போலே, மதமழை - மதவெள்ளத்தைப் பெருக்குகின்ற யானைகளிடத்து, படு-உண்டாகின்ற, தரளமும் - முத்துக்களையும், மணியும் - (மற்ற) இரத்தினங்களையும், வாரி - வாரிக்கொண்டு, நேர் - நேர்மைபொருந்திய, இழைபடர்ந்து அனைய- ஆபரணங்கள் பரவியதை யொத்த, நீர் அருவி - அருவி நீரானது, எய்தலால் - அடைதலால், குழைபடு - குண்டலங்களோடுங் கூடிய, முகத்தியர் - முகத்தையுடைய மாதரது, கோலம்ஒப்பது - உருவம் போன்றது, எ - று.

கழைமுதலியவற்றுள் முத்துப்பிறக்கு மென்பதை,—

"தந்திவராக மருப்பிப்பிபூகந் தழைகதலி
நந்துசலஞ்சல மீன்றலைகொக்கு நளினமின்னார்

கந்தரஞ்சாலி கழைகன்னலாவின்பல் கட்செவிகார்
இந்துவுடும்பு கதிர்முத்தமீனு மிருபதுமே"

என்பதனாலறிக.

**12**.—பொங்கு - மிகுந்த, வெம்-வெப்பம்பொருந்திய, கடம்-மதத்தையு டைய, கரி - யானைகள், பொதுவின் ஆடலின் - கூட்டத்துடன் கலக்குத லால், கங்குலின் - இரவில், எதிர் பொரு - எதிர்த்துச் செய்யும், கலவி பூசலில் - சிருங்கார சேஷ்டைகளால், அங்கம் நொந்து - உடல் வருந்தி, அலசிய - இளைத்துச் சோர்ந்த, ஆய் வளை- ஆய்ந்தெடுத்த வளையல்களை யணி ந்த, விலையின் மங்கையர் - வேசையர்களின், வடிவு என - உருவம்போல, வருந்து மெய்யது - வருந்து முருவோடு கூடியது ; எ - று.—வேசையர்கள் பலபுருஷர்களாலே சிருங்கார சேஷ்டைகளை யடைந்து சோர்வதுபோல இப்பொய்கையும் பல யானைகளாலே கலக்கப்பட்டமையின் இவ்வாறு கூற ப்பட்ட தென்க.

**13**.—விண்தொடர் - ஆகாயத்தை யளாவிய, நெடுவரை - பெரியமலைக ளினின்றிழிகின்ற, தேன்உம் - தேன் பெருக்கும், வேழத்தின்-யானைகளது, வண்டு உளர்-வண்டுகள் கிண்டப்பெற்ற, நறு-வாசனையுள்ள, மத மழை உம்- மதப் பெருக்கும், மண்டலால் - சேர்தலால், உண்டவர் - அந்நீரை யுண் டவர்கள், பெரும் களிப்பு உறலின் - மிகுந்த களிப்பை யடைவதனால், ஓதியர்- கூந்தலையுடைய பெண்களது, தொண்டை அம் கனி இதழ் - அழ கிய கோவைப்பழத்தை யொத்த அதரம் போல், தோன்றல் சான்றது - தோற்றஞ் சிறந்தது ; எ - று.

**14**.—ஆரியம் முதலிய - ஸம்ஸ்கிருத முதலாகிய, பதினெண் பாடையில் பூரியர் - பதினெட்டுப் பாஷைகளை (இலக்கண விலக்கியப் பயிற்சியின்றிப்) பேசுகின்ற புல்லியர், ஒருவழி - ஓரிடத்தில், புகுந்த போன்ற - புகுந்ததை பொத்து, ஓர்கில - அறிதற்கு அரியவைகளாயும், ஒன்றோடு ஒப்பில - ஒன் றற்கொன்று பொருத்தமில்லாதவைகளாயும் உள்ள, கிளவிகள்- மொழிகளை, சோர்வு இல - சோர்வு இல்லாமல் [ஓயாமல்], விளம்பு புள் - சொல்லும் பறவைகள், துவன்றுகின்றது-நெருங்கப்பெற்றது ; எ - று.

"ஆரியமுதலியபதினெண்பாடை" என்றது ஆரியத்தையும் தமிழ்நீங்கிய தேசபாஷைகள் பதினேழினையும் என்க. தமிழ் நீங்கிய தேசபாஷைகள் பதினேழு மிவை யென்பது

"சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக்குடகங்
கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங்கலிங்கம்வங்கம்
சங்கமகதங் கடாரங் கவுடங் கடுங்குசலந்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமிவையே"

என்னுங் கட்டளைக் கலித்துறையாலறிக; எனவே பாஷைகள் பத்தொன் பதாமெனக் கொள்க. "பத்தொடொன்பது பாடைநூல்களும்" எனப் பிறர்கூறியதுங் காண்க.